பழமொழியாகமம் 16:3

உன் கிரிகைகளை ஆண்டவ ருக்குத் திறந்து காட்டினால் உன் சிந்தனைகள் சீர்படுத்தப்படும்.

கொலோசியர் 3:23-24

நீங்கள் எதைச் செய்தாலும், மனிதருக்கென்று செய்யாமல், ஆண்டவருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். ஆண்டவரிடத்தில் சுதந்திரத்தின் சம்பாவனையைப் பெற்றுக்கொள்வீர்களென்று அறிந்து, கிறீஸ்துநாதருக்கு ஊழியஞ்செய்யுங்கள். ழுழுழு 23,24. உரோமையர்களுக்குள் அடிமைகள் என்ன வேலை செய்தாலும் அவர்களுக்குச் சுதந் திரமென்று ஒன்றுமில்லை. சர்வேசுரனுடைய ஊழியர்களாகிற கிறீஸ்தவர்கள் எவ்விதத் தாராயிருந்தாலும் ஆண்டவருடைய இராச்சியத்துக்குச் சுதந்திரக்காரராயிருக்கிறார்கள்.

கொரிந்தியர் 1 16:14

உங்கள் காரியமெல்லாம் பரம அன்போடு செய்யப்படக்கடவது.

கொரிந்தியர் 1 15:58

ஆகையால் நமக்குப் பிரியமான சகோதரரே, ஆண்டவரிடத்தில் நீங்கள் படுகிற பிரயாசம் வீணாய்ப் போகிறதில்லையென்று அறிந்து, நிலை மையுள்ளவர்களாயும், அசையாத வர்களாயும், இடைவிடாமல் ஆண்ட வருக்குரிய கிரியைகளை மிகுதியாய்ச் செய்பவர்களாயும் இருப்பீர்களாக.

பழமொழியாகமம் 12:24

வல்லவர்களின் புஷஜம் ஆட்சி செலுத்தும்; அசமந்தமான கரமோ வெனில் கப்பங்களுக்குச் சேவிக்கும்.

பழமொழியாகமம் 10:22

தேவாசீர்வாதத்தால் மனிதர் திரவிய சம்பன்னராவார்கள்; துன்ப மும் அவர்களைச் சேராது.

கொலோசியர் 3:17

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதெதைச் செய்தாலும், அவையெல்லாம் ஆண்டவரா

கிய சேசுக்கிறீஸ்துவின் நாமத்தினாலே செய்து, அவர் மூலமாய்ப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத் திரம் பண்ணுங்கள். (1 கொரி. 10:31.)

### பழமொழியாகமம் 13:11

சடுதியான சம்பாத்தியம் குறைந்துபோகும்; மெதுவாய்க் கையில் சேர்ந்ததோ மிகுந்து வரும்.

### சங்கீதங்கள் 90:17

### தீமோத்தேயு 2 2:15

நீர் வெட்கப்படாத ஊழியனாகச் சத்திய வாக்கியத்தை ஒழுங்காய்ப் போதித்து, சர்வேசுரனுடைய அங்கீகரிப்புக்கு ஏற்றவராக உம்மைக் காட்டும்படி அக்கறையாய்ப் பார்த்துக் கொள்ளும்.

### அருளப்பர் 2-ம் நிருபம் 1:8

நீங்கள் செய்த வேலையை இழக்காமல், அதன் பூரண சம்பாவனையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு எச்சரிக்கை யாயிருங்கள். (அரு. 8:31.)

### கொரிந்தியர் 2 9:8

மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் உங்களுக்குப் போதுமான யாவற்றையுங் கொண்டிருந்து, எவ்வித நற்கிரியைகளிலும் சம்பூரணமுள்ளவர்களாகும்படி சர்வேசுரன் உங்களிடத்தில் எவ்வித நன்மைகளையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:26

ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சி யங்களில் குவிக்கிறதுமில்லை . ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்து வருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ?

### சங்கப் பிரசங்கியாகமம் 3:12-13

என் வாழ்நாட்களில் மகிழ் வதையும் நன்மை செய்வதையும் பார்க்கிலும் நலமானதொன்று மில்லை என்றறிந்தேன். ஏனெனில் எவன் புசித்துக் குடித்துத் தன் பிரயாசத்தால் உண் டான நன்மையைப்

பார்ப்பது அவனுக்கு தேவன் தந்த வரம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:24

ஆயினும் அவைகளில் யாதொன் றிற்கும் நான் பயப்படுகிறதுமில்லை; என்னைப்பார்க்கிலும் என் உயிரைப் பெரிய காரியமாக எண்ணுகிறதுமில்லை. சர்வேசுரனுடைய கிருபையின் சுவிசேஷத்துக்குச் சாட்சியஞ் சொல்லும்படி ஆண்டவராகிய சேசுநாதரிடத்தில் நான் பெற்றுக்கொண்ட பிரசங்கத் தொழிலையும் நிறைவேற்றி, என் ஷஜீவிய அயனத் தையும் முடிப்பேனாகில் அதுவே போதும்.

இராயப்பர் பொது நிருபம் 1 3:13

நீங்கள் நன்மையை நாடிச்சென்றால், உங்களுக்குத் தீங்குசெய்பவன் யார்?

தீமோத்தேயு 2 3:16-17

சர்வேசுரனுடைய மனுஷன் எவ்வித நற்கிரியையும் செய்வதற்குத் தகுந்த உத்தமனாவதற்குத் தேவ ஏவலால் அருளப்பட்ட வேதாகமங்கள் போதிப்பதற்கும், கண்டிப்பதற்கும், திருத்துவதற்கும், நீதிநெறியில் நடத்துவதற்கும் பிரயோஷஜனமுள்ளது. (2 இரா. 1:20.)

சங்கப் பிரசங்கியாகமம் 5:19

தேவன் அவனுடைய இருத யத்திற்கு இன்பத்தைத் தந்தருளின படியால் அவன் தன் உயிர் நாட் களை அதிகமாய் நினையான்.

சங்கப் பிரசங்கியாகமம் 4:9

அப்படியிருக்க, ஒன்றியாயிருக் கிறதிலும் இருவராகக் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய கூட்டுற வினால் அவர்களுக்கு நன்மையுண் டாகும்.